


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (FIH) ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை தமிழ்நாடு 2025 போட்டியின் அதிகாரப்பூர்வ இலட்சினையை (Logo) வெளியிட்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பீகார் மாநில விளையாட்டு ஆணைய தலைமை செயல் அலுவலர் ரவீந்தரன் சங்கரன், ஹாக்கி இந்தியா பொதுச் செயலாளர் போலா நாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே.ஸ்ரீவத்சவா உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் (FIH) ஆடவர் ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை தமிழ்நாடு 2025 போட்டி நடத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பீகார் மாநில விளையாட்டு ஆணைய தலைமை செயல் அலுவலர் ரவீந்தரன் சங்கரன், ஹாக்கி இந்தியா பொதுச் செயலாளர் போலா நாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொது) கமாண்டர் ஆர்.கே.ஸ்ரீவத்சவா உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

### நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெறும்!

# தமிழ்நாட்டில் ‘இளையோர் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை’ போட்டிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 21–**

**இளையோர் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை – 2025 போட்டிகள் வருகிற நவம்பர், டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் நடைபெற உள்ளன. இதற்கான அறிவிப்பை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நேற்று முன்தினம் அறிவித்தார்.**

**இதற்காக சென்னை தாஜ் கொரமண்டல் ஓட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.**

இதைத் தொடர்ந்து அவர் பேசியதாவது:

நமது முதலமைச்சரின் தொலைநோக்குள்ள தலைமையின் கீழ், 2025-ஆம் ஆண்டுக்கான இளையோர் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பைக்கான போட்டிகள் வரும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த சர்வதேச ஹாக்கி போட்டிகள், தலைநகர் சென்னை மற்றும் மதுரையில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள், நமது மாநிலத்தின் பண்பாடு, நமது வளமிக்க ஹாக்கி மரபு மற்றும் உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை வெளிப்படுத்தும் விதமாக நிச்சயம் அமையும்.




**திறமையான வீரர்கள்!**

நமது மாநிலம் ஹாக்கியில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது, தமிழ்நாடு. ஒலிம்பிக் மற்றும் உலகக் கோப்பை போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல திறமையான வீரர்களை உருவாக்கி இருக்கிறது. அந்தப் போட்டிகளில் இந்திய நாட்டின் மிகச் சிறந்த வெற்றிகளுக்குப் பங்களித்துள்ளது.

முதல் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராஃபி (1996), இந்தியா-பாகிஸ்தான் தொடர் (1999), ஆசியக் கோப்பை (2007), இந்தியா-பெல்ஜியம் தொடர் (2008), 7-வது ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராஃபி (2023) உள்ளிட்ட முக்கிய ஹாக்கி நிகழ்வுகளை நடத்திய பாரம்பரியத்தைக் கொண்டது தமிழ்நாடு.

**ஹாக்கி உலகக் கோப்பை**

இதன் தொடர்ச்சியாக 14-வது இளையோர் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பையை நடத்த நாம் தயாராகி வருகிறோம். இந்தப் போட்டிகளில் உலகம் முழுவதிலுமிருந்து 24 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இந்நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்காக, தமிழ்நாடு அரசு 65 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு, மதுரையில் புதிய உலகத்தரம் வாய்ந்த செயற்கை மைதானம் (SYNTHETIC TURF) அமைப்பதற்கும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப்படும்.

கடந்த 4 ஆண்டுகளில், 44-வது FIDE செஸ் ஒலிம்பியாட் (2022), ஸ்குவாஷ் உலகக் கோப்பை (2023), ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராஃபி (2023), உலக சர்ஃபிங் லீக் (2023), சென்னை சைக்கிளத்தான், கேலோ இந்தியா தேசிய இளையோர் விளையாட்டு (2023), தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் (2024), ஃபார்முலா- 4 இரவு தெரு பந்தயம் (2024), சென்னை ஓபன் (WTA 250 டோர்னமென்ட்) உள்ளிட்ட பல முக்கிய பன்னாட்டுப் போட்டிகளை நடத்தி, தமிழ்நாடு அரசு தனது திறனை வெளிப்படுத்தியுள்ளது.

**விளையாட்டு தலைநகர்**

இந்த வேளையில், தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்துவதற்கு தனது அசைக்க முடியாத ஆதரவை நல்கிவரும் மாண்புமிகு முதலமைச்சருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் போட்டியை மாநிலம் முழுவதும் மட்டுமின்றி, நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் கொண்டு செல்ல ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளின் ஆதரவை கோருகிறோம்.

தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக மாற்ற ஒன்றுகூடி உழைப்போம்!

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்-செயலர் ஜே.மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., ஹாக்கி இந்தியாவின் பொதுச் செயலாளர் போலேநாத் சிங், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவர் சேகர். ஜெ. மனோகரன், ஹாக்கி இந்தியாவின் தலைமை இயக்குநர் ஆர்.கே. ஸ்ரீவத்சவா உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.6.2025 அன்று சென்னை வேளச்சேரி ஏஜிபி நீச்சல்குள வளாகத்தில் 48.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விளையாட்டு வீரர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அதி நவீன குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சி கூடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.6.2025 அன்று சென்னை வேளச்சேரி ஏஜிபி நீச்சல்குள வளாகத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு வீராங்கனைகளுக்கான விடுதியில் அவர்கள் தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டு, அவர்கள் பெற்று வரும் பயிற்சி குறித்தும், கலந்து கொண்ட விளையாட்டு போட்டிகள் குறித்தும் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.

### மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான

# மெட்ரோ இரயில் கட்டுமானப் பணிகள்– முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை, ஜூன் 21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னை, கிண்டி, கத்திப்பாரா பகுதியில் நடைபெற்றுவரும், வழித்தடம் 5 - மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான மெட்ரோ இரயில் கட்டுமானப் பணிகளை, பார்வையிட்டு ஆய்வு செய்ததோடு, வழித்தடம் 3 - மாதவரம் முதல் சிறுசேரி வரையிலான கட்டுமானத்தின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது முதலமைச்சர் அவர்கள் மின்தூக்கி மூலம் உயரே சென்று, உயரத்திலிருந்து கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டார்.

கத்திப்பாரா பகுதியில் ஏற்கனவே அமையப் பெற்றிருக்கும் வழித்தடம் 1. வழித்தடம் 2 மற்றும் கத்திப்பாரா மேம்பாலம் உள்ளடக்கிய சந்திப்பில் சமச்சீர் காண்டிலீவர் (Balance Cantilever) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதிலுள்ள சவால்கள் குறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் (திட்டங்கள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

**சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம் 5 பற்றிய விவரங்கள்**

இவ்வழித்தடம், பட் ரோட்டினை கடந்தபின், கத்திப்பாரா சென்றடைந்து, பின்னர் உள்வட்ட சாலை வழியாக மேடவாக்கம் பிரதான சாலையை அடைகிறது. கத்திப்பாரா பகுதியில் நெடுஞ்சாலை துறையின் மேம்பாலம், மெட்ரோ வழித்தடம்-1 மற்றும் 2 அமையப் பெற்றுள்ளமையால், சமச்சீர் காண்டிலீவர் எனப்படும் கட்டமைப்பின் கீழ் சாரக்கட்டு அமைப்புகள் ஏற்படுத்தாமல் கட்டுமானத்தை செயல்படுத்தும் ஒரு சிறப்பு கட்டுமான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

கத்திப்பாரா பகுதியில் 125 மீட்டர் ஆரம் வளைவுடன் 5 தொடர்ச்சியான BCM (Balance Cantilever Method) ஸ்பான்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. தண்டவாளங்கள் தரை மட்டத்திலிருந்து 31 மீட்டர் உயரத்தில் அமைக்கப்படுகிறது. பின்னர் அவைகள் சுரங்கப் பாதை வழியாக தரையை அடைந்து, அங்கிருந்து கத்திப்பாரா மேம்பாலம், மெட்ரோ வழித்தடம் 1 மற்றும் 2 வழியே செல்கிறது. மொத்த BCM நீளம் 413 மீட்டர் ஆகும், மொத்தம் 6 தூண்கள் மற்றும் 10 தூண்கள் இடையிலான கூறுகள் கொண்டதாகும்.

இதுவரை 80 கூறுகளில் 30 கூறுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு ள்ளது. 2025 டிசம்பர் மாதத்திற்குள் ஆலந்தூர் வரையிலான வழித்தடப் பகுதி முடிவுறுமென கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்தியாவிலேயே முதன்முறையாக மேம்பாலத்தின் மேல் மெட்ரோ வழித்தடங்கல் அமைக்கப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதள பதிவு!**

சென்னை, கிண்டி, கத்திப்பாரா பகுதியில் நடைபெற்று வரும் மெட்ரோ இரயில் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

சென்னையின் நவீன அடையாளமாக கத்திப்பாரா மேம்பாலத்தை அமைத்தார் தலைவர் கலைஞர்!

அந்த மேம்பாலத்தின் மேல் இந்தியாவிலேயே முதன்முறையாக மெட்ரோ வழித்தடங்கள் அமைக்கப்படும் பணிகளைப் பார்வையிட்டேன்.

Engineering Marvel என அனைவரும் வியக்க உருவாகி வரும் இது உரிய காலத்தில் முடிக்கப்பட்டு, விரைவில் சென்னை மக்களின் நகரப் பயணம் இனிமையாக அமைந்திட வழிசெய்ய அறிவுறுத்தினேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.